# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2002 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, வாடகை (திருத்தச்) சட்டம்

---

(2002 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2002, ஒற்றோபர் மாதம் 25 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 13.75 தபாற் செலவு : ரூபா 6.75

## 2002 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, வாடகை (திருத்தச்) சட்டம்

[2002 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ—ஓ 09/2001
4632

## 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வாடகைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

கருக்கப்பெயர்.

**1.** இச்சட்டம் 2002 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, வாடகை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**2.** (1) இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும் 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வாடகைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் அதன் (இ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(இஇ) 1980 ஆம் ஆண்டு சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் நிலக்கிழாரினால் இருப்பாட்சி செய்யப்பட்டவையும் அல்லது உடைமை கொள்ளப்பட்டவையும் அந்தத் தேதியில் அல்லது அதற்குப்பின்னர் வாடகைக்கு விடப்பட்டவையும் ஆன வதிவிட வளவுகள்.".

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவிற்குச் செய்யப்பட்ட திருத்தமானது, எல்லா நோக்கங்களுக்காகவும் 1980 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதி வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "அத்தகைய வளவுகளின் ஆண்டொன்றுக்கான நியம வாடகையானது," என்ற சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய செலவினம், நிலக்கிழாரினாலும் வாடகைக் குடியிருப்பாளராலும் சமபங்காகப் பொறுத்துக் கொள்ளப்பட்டாலொழிய அத்தகைய வளவுகளின் ஆண்டொன்றுக்கான நியம வாடகையானது," என்ற சொற்களைப் பதிலீடு செய்வதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவானது அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கி அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :–

"(1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக வாடகைக் கொடுப்பனவுப் பிரதிபயனுக்காக ஏதேனும் வளவை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை எவரேனும் ஆள் இருப்பாட்சி செய்வாராயின் அத்தகைய ஆளுக்கு அத்தகைய வளவின் ஏதேனும் பாகம் வாடகைக்கு விடப்பட்டதாக அல்லது கீழ் வாடகைக்கு விடப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வளவு வாடகைக்கு விடப்படுதலுக்கு அல்லது கீழ்வாடகைக்கு விடப்படுதலுக்கு நிலக்கிழார் எழுத்தில் சம்மதித்திருந்தாலொழிய, அத்தகைய வாடகைக்கு விடுதலுக்கு அல்லது கீழ்வாடகைக்கு விடுதலுக்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 18அ என்னும் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :–

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பந்தி (அ) வில் "வதிவிட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுவதும் விண்ணப்பம்செய்யும் தேதியிலிருந்து ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டதுமான" என்ற சொற்களுக்குப் பதிலாக "வதிவிட அல்லது வியாபார நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுவதும் விண்ணப்ப தேதியிலிருந்து ஆகக்குறைந்தது நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டதுமான" என்ற சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் –

(அ) பந்தி (அ) வில், "வதிவிடக் கூறுகளின்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "வதிவிட அல்லது வியாபார கூறுகளின்" என்ற சொற்களை இடுவதன்மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :–

"(ஆ) (i) அத்தகைய கட்டடத்தின் வாடகைக் குடியிருப்பாளர் எவரேனுமிருப்பின் அவருக்கு, கட்டட நிருமாணக் காலப் பகுதியின்போதும், விடயத்துக்கேற்ப, இருப்பாட்சிக்கு அல்லது வியாபாரத்துக்கு எனக் கட்டடம் கட்டிமுடிக்கப்படும் வரையும் அச்சுற்றுப்புறத்தில் மாற்றிடம் ஏற்பாடுசெய்து கொடுக்குமாறு அல்லது மாற்றாக, விடயத்துக்கேற்ப, இருப்பாட்சிக்கு அல்லது வியாபாரத்துக்கு எனப் புதிய கட்டடத்தை நிருமாணித்து முடிக்கும்வரை வாடகைக் குடியிருப்பாளர் ஒரு தற்காலிகத் தன்மையினதான மாற்றிடத்தை ஒழுங்கு செய்துகொள்வதற்கு இயலச் செய்ய என அவருக்கு ஈராண்டு வாடகைக்குச் சமமான ஒரு தொகையை ஆரம்பத்தில் கொடுக்குமாறு அத்தகைய கட்டடச் சொந்தக்காரருக்குக் கட்டளையிடுதல் வேண்டும் ; அல்லது

(ii) அக்கட்டடத்தின் வாடகைக் குடியிருப்பாளருக்கு, அவரது உடைமையிழப்புக்காக ஆணையாளர் நியாயமானதெனத் தீர்மானிக்கின்ற அத்தகைய நட்டஈட்டைச் செலுத்தும் படி அத்தகைய கட்டடச் சொந்தக்காரருக்குக் கட்டளையிடுதல் வேண்டும் ; ஆயின் எவ்வாறாயினும் அவ்வாறு செலுத்தும்படி கட்டளையிடப்படும் தொகையானது, எவ்விடயத்திலும், அழிப்புக்கான விண்ணப்ப தேதியில் கணிக்கப்படும், வளவின் பத்து வருடங்களுக்கான ஆண்டுப் பெறுமதிக்குக் குறையாத தொகை அல்லது அழிப்புக்கான விண்ணப்ப தேதியில் பிரதான விலைமதிப்பீட்டாளரால் தீர்மானிக்கப்பட்டவாறான வளவின் சந்தைப் பெறுமதியின் இருபது சதவீதம் அல்லது ஓரிலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா இவற்றுள் எது கூடியதோ அத் தொகையாதல் வேண்டும்.".

(3) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவில் "வதிவிட கூறுகளைக்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "வதிவிட அல்லது வியாபார கூறுகளைக்" என்ற சொற்களை இடுவதன்மூலமும் ;

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் இறுதியில் பின்வருவனவற்றைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :–

"இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக, "போதுமானளவு இடவசதி அத்தகைய காணியில் உண்டெனவும்" என்பது –

(i) கொழும்பு மாநகர சபை எல்லைகளினுள் அமைந்துள்ள காணி ஒன்று தொடர்பில், பரப்பளவில் ஆறு பேர்ச்சுக்களிலும் கூடுதலான காணி எனப் பொருள்படுவதாதல் வேண்டும் ; அத்துடன்

(ii) வேறு ஏதேனும் இடப்பரப்பில் அமைந்துள்ள காணி தொடர்பில் பரப்பளவில் எட்டு பேர்ச்சுகளிலும் கூடுதலான காணி எனப் பொருள்படுவதாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20அ ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20அ ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :–

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் –

(அ) "எவையேனும் வதிவிட வளவுகளின்" என்னும் சொற்களிலிருந்து அவ்வுட்பிரிவின் முடிவுவரையான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "எவையேனும் வளவுகளின் எல்லைகளினுள்ளே பரப்பளவில் ஆறு பேர்ச்சுகள் விஞ்சிய சேர்மானமான காணி கொழும்பு மாநகரசபை எல்லைகளினுள்ளும், பரப்பளவில் எட்டுப் பேர்ச்சுகளை விஞ்சிய காணி வேறேதேனும் இடப்பரப்பினுள்ளும் அமைந்துள்ளவிடத்து, அத்தகைய காணியின்மீது வதிவிட அல்லது வியாபார நோக்கங்களுக்காக ஏதேனும் கட்டடத்தை நிருமாணிக்

கும்படி அல்லது வதிவிட அல்லது வியாபார நோக்கங்களுக்காகப் பயன்படுத்தக்கூடிய தகவுடையவையான ஏலவேயுள்ள கட்டடங்களுக்கு அத்தகைய நீட்டங்களைச் செய்யும்படி அத்தகைய வளவுகளின் நிலக்கிழாருக்கு அதிகாரமளித்துக் கட்டளையை ஆக்கலாம்." ; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவுக்கான காப்பு வாசகத்தை நீக்குவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் "வதிவிட நோக்கங்களுக்காக" என்ற சொற்களுக்குப் பதிலாக அப்பந்தியில் அச்சொற்கள் இடம்பெறும் இடங்களிலெல்லாம் "வதிவிட அல்லது வியாபார நோக்கங்களுக்காக" என்ற சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் "வதிவிடக் கூறுகள்" என்ற சொற்களுக்குப் பதிலாக "வதிவிட அல்லது வியாபாரக் கூறுகள்" என்ற சொற்களை இடுவதன் மூலமும் திருத்தப்படுகின்றது.

8. (1) முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் —

(i) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன்மூலமும் :—

"(ஆ) அத்தகைய வளவுகள், நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தில், நிலக்கிழாருக்கு அல்லது நிலக்கிழாரரின் குடும்ப உறுப்பினரெவருக்கும் வதிவிடமொன்றாக இருப்பாட்சி செய்ய அல்லது நிலக்கிழாரின் வியாபாரம், தொழில்,

உயர்தொழில், செய் தொழில் அல்லது ஊழிய நோக்கங்களுக்கு என நியாய மாகத் தேவைப்படுகின்றவிடத்தும், அத்தகைய நிலக்கிழார் அத்தகைய வழக்கை அல்லது வழக்கு நடவடிக்கை யைத் தொடுக்குமுன்னராக பத்தாண்டு வாடகைக்குச் சமமானவொரு தொகை அல்லது ஓரிலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா ஆகிய இவற்றுள் எது கூடியதோ அத்தொகையைத் தேசிய வீடமைப்பு ஆணையாளரிடம் வைப்பிலிட்டு அத்த கைய வழக்கு அல்லது வழக்கு நடவடிக் கையின் அறிவித்தலை ஆணையாள ருக்குச் சேர்ப்பிக்கச் செய்துள்ளவிடத்து மன்றி ; அல்லது";

(ii) அவ்வுட்பிரிவின் (ஆஆ) என்னும் பந்தியை நீக்குவதன்மூலமும் ;

(iii) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், "நீதி மன்றத்தின் கருத்துப்படி சீரழிந்திருந்தா லொழிய," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நீதிமன்றத்தின் கருத்துப்படி சீரழிந்திருந் தாலொழிய ; அல்லது" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(iv) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் பந்திகளை உட்புகுத்துவதன்மூலமும் :—

(உ) அத்தகைய வளவுக்கு நிலக்கிழாரதும் இயைபான உள்ளூர் அதிகாரசபை யினதும் எழுத்திலான முன்னங்கீகா ரமின்றி வாடகைக் குடியிருப்பாளரால் கட்டமைப்பு மாற்றங்கள் செய்யப்பட் டிருந்தாலொழிய ; அல்லது

(ஊ) அத்தகைய வளவின் தன்மையானது, நிலக்கிழாரின் எழுத்திலான முன்னங்கீ காரத்தைப் பெறாது வாடகைக் குடியிருப்பாளரால் பகுதியளவிலோ

முழுமையாகவோ வதிவிட வளவாக விருந்து வியாபார வளவாக அல்லது மறுவாறாக மாற்றப்பட்டிருந்தா லொழிய ; அல்லது

(எ) வளவுகள் அபிவிருத்தி நோக்கத்துக்குத் தேவைப்பட்டு, வழக்குத் தொடுக்கப் பட்ட தேதியன்றுள்ளவாறு கணிக்கப் பட்ட அத்தகைய வளவுகளின் பத்து வருடங்களுக்கான ஆண்டுப் பெறுமதிக் குச் சமமான ஒரு தொகை அல்லது வழக்குத் தொடுத்த தேதியில் உள்ள வாறு பிரதான விலைமதிப்பீட்டாளரால் தீர்மானிக்கப்படும் அத்தகைய வளவுக ளின் சந்தைப் பெறுமதியின் இருபது சதவீதம், அல்லது ஓரிலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா ஆகிய இவற்றுள் எது கூடியதோ அத்தொகை, நட்டஈடாக வாடகைக் குடியிருப்பாளருக்குச் செலுத் தப்படுவதற்காகத் தேசிய வீடமைப்பு ஆணையாளரிடம் நிலக்கிழாரினால் வைப்பிடப்பட்டிருந்தாலொழிய.";

(ஆ) அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவை நீக்கவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(1அ) தேசிய வீடமைப்பு ஆணையாளருக்கு (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் வாடகைக் குடியிருப்பாளரை வெளியேற்றுவதற்கான ஏதேனும் வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கைபற்றி நிலக்கிழாரினால் அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்டுள்ள விடத்து, ஆணையாளரானவர், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பொது முகாமை யாளருடனான கலந்தாலோசனையுடன் அத்தகைய வளவின் வாடகைக் குடியிருப்பாளருக்கு மாற்றிடம் வழங்கப்பட ஒழுங்குசெய்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒழுங்கு செய்யப்பட்டதன்மீது, நீதிமன்றத்துக்கு —

(i) அத்தகைய வளவின் வாடகைக் குடியிருப்பாளருக்கு மாற்றிடம் உள்ளமைபற்றி ;

(ii) அத்தகைய மாற்றிடத்தின் விற்பனை விலை பற்றி ; அத்துடன்

(iii) ஒராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் நிலக்கிழாரினால் வைப்புச் செய்யப்பட்ட தொகையைக் கழித்தபின்னர் வாடகைக் குடியிருப்பாளரால் அத்தகைய மாற்றிடத்தின் முழுச் சொந்தக்காரனாக வருவதற்கு எழுநூற்றியிருபது சமமான தவணைக் கட்டணங்களில், வட்டியெதுவுமின்றிச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை விலையில் எஞ்சியுள்ள தொகைபற்றி,

அறிவித்தல் வேண்டும்." ;

(இ) அப்பிரிவின் (1ஆ) என்னும் உட்பிரிவில், "ஒராம் உட்பிரிவின் (ஆஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள எவையேனும் வளவுகளிலிருந்து" என்னும் சொற்களுக்கும் இலக்கத்திற்கும் பதிலாக, "எவையேனும் வளவுகளிலிருந்து" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஈ) அப்பிரிவின் (1இ) என்னும் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன் மூலமும் :—

"(1இ) எவையேனும் வளவுகளின் வாடகைக் குடியிருப்பாளரை வெளியேற்றுவதற்கான தீர்வையொன்று அத்தகைய வளவுகள் நிலக்கிழாரினால் அல்லது நிலக்கிழாரின் குடும்பத்தின் எவரேனும் உறுப்பினரால் இருப்பாட்சி செய்வதற்கு அல்லது நிலக்கிழாரின் வியாபாரம், தொழில், உயர்தொழில், செய்தொழில் அல்லது ஊழிய நோக்கங்களுக்காக நியாயமாகத் தேவைப்படுகின்றது என்ற ஏதுவின் மீது, ஏதேனும் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்டிருக்கின்றவிடத்தும், அத்துடன்

(அ) தேசிய வீடமைப்பு ஆணையாளர், (1அ) என்னும் உட்பிரிவின்கீழ் அத்தகைய வாடகைக் குடியிருப்பாளருக்கு மாற்றிடத்தை வழங்குவதற்கு இயலும் என நீதிமன்றத்திற்கு அறிவித்திருக்கின்றவிடத்தும் ; அல்லது

(ஆ) தேசிய வீடமைப்பு ஆணையாளர், வெளியேற்றத் தீர்வைத் தேதியில் இருந்து ஓராண்டு காலப் பகுதியொன்றுக்கு மேல், (1அ) என்னும் உட்பிரிவின்கீழ் மாற்றிடம் உள்ளமைபற்றி நீதிமன்றத்திற்கு அறிவிக்கத் தவறி, அத்துடன் நீதிமன்றமானது நிலக்கிழாரினால் —

(i) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் தேசிய வீடமைப்பு ஆணையாளரிடம் தம்மால் வைப்புச் செய்யப்படத் தேவைப்படுத்தப்பட்ட பணத்தொகையை வைப்புச் செய்துள்ளார் என்றும் ;

(ii) தேசிய வீடமைப்பு ஆணையாளர் (1அ) என்னும் உட்பிரிவின்கீழ் மாற்றிடம் உள்ளமைபற்றி நீதிமன்றத்திற்கு அறிவிக்கத் தவறியுள்ளார் என்றும் ; அத்துடன்

(iii) வெளியேற்றத்திற்கான தீர்வை ஆக்கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதி முடிந்துவிட்டதென்றும் நிறைவேற்று எழுத்தாணை பெறுவதற்குத் தாம் உரித்துடையவர் என்றும்,

கூறிச் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது திருப்திப்படுகின்றவிடத்து, நீதிமன்றம் அத்தகைய வளவுகளின் நிலக்கிழாருக்கு வளவுகளின் வெற்றுடைமையை வழங்கும்படி நீதிமன்றத்தின் பிசுக்காலைத் தேவைப்படுத்தியும் அவருக்கு அதிகாரமளித்தும் தீர்வை நிறைவேற்று ஆணையை வழங்குதல் வேண்டும்." ;

(உ) அப்பிரிவின் (1ஈ) என்னும் உட்பிரிவில் "(1) ஆம் உட்பிரிவின் (ஆஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எவையேனும் வளவுகளின் வாடகைக் குடியிருப்பாளரை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எவையேனும் வளவுகளின் வாடகைக் குடியிருப்பாளரை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஊ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் —

(i) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "நீதிமன்றத்தின் கருத்துப்படி சீரழிந்திருந்தாலொழிய" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நீதிமன்றத்தின் கருத்துப்படி சீரழிந்திருந்தாலொழிய ; அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ii) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(உ) அத்தகைய வளவுக்கு நிலக்கிழாரதும் இயைபான உள்ளூர் அதிகாரசபையினதும் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி வாடகைக் குடியிருப்பாளரால் கட்டமைப்பு மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தாலொழிய ; அல்லது

(ஊ) அத்தகைய வளவின் தன்மையானது, நிலக்கிழாரின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறாது வாடகைக் குடியிருப்பாளரால் பகுதியளவிலோ முழுமையாகவோ வதிவிட வளவாகவிருந்து வியாபார வளவாக அல்லது மறுவாறாக மாற்றப்பட்டிருந்தாலொழிய ; அல்லது

(எ) வளவுகள் அபிவிருத்தி நோக்கத்துக்குத் தேவைப்பட்டு, வழக்குத் தொடுக்கப்பட்ட தேதியன்றுள்ளவாறு கணிக்கப்பட்ட அத்தகைய வளவுகளின் பத்து வருடங்களுக்கான ஆண்டுப் பெறுமதிக்குச் சமமான தொகை அல்லது வழக்குத் தொடுத்த தேதியில் உள்ளவாறு பிரதான விலைமதிப்பீட்டாளரால் தீர்மானிக்கப்படும் அத்தகைய வளவுகளின் சந்தைப்பெறுமதியின் இருபது சதவீதம், அல்லது ஓரிலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா ஆகிய இவற்றுள் எது கூடியதோ அத்தொகை நட்டஈடாக வாடகைக் குடியிருப்பாளருக்குச் செலுத்தப்படுவதற்காக தேசிய வீடமைப்பு ஆணையாளரிடம் நிலக்கிழாரினால் வைப்பிடப்பட்டிருந்தாலொழிய." ;

(எ) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் —

(i) அவ்வுட்பிரின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலம் :—

"(அ) வாடகைக் குடியிருப்பாளருக்கு வாடகைக் குடியிருப்பு முடிவுறுத்தல் பற்றி மூன்றுமாத அறிவித்தல் கொடுக்க வில்லையாயின் ; அல்லது" ; அத்துடன்

(ii) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் —

"எல்லா வாடகை நிலுவைகளையும் காணிச் சொந்தக்காரருக்குக் கொடுத்திருப்பாராயின்." என்னும் சொற்களுக்குப் பதிலாக. "எல்லா வாடகை நிலுவைகளையும் நிலக்கிழாருக்குச் செலுத்த முன்வைத்திருப்பாராயின் ; ஆயின் வாடகை நிலுவைகளை அவ்வாறு செலுத்த முன்வைத்தல் முதற்றடவையாயிருக்கும்பட்சத்தில்." ;

என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஏ) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் "அவ்வளவு களிலிருந்து வாடைகக் குடியிருப்பாளரை வெளி யேற்றுவதற்கான எழுத்தாணை வழங்கப்படலாகா தெனக் கட்டளையிடலாம் ; " என்னும் சொற்களுக்குப் பதிலாக. "அவ்வளவுகளிலிருந்து வாடகைக் குடியிருப்பாளரை வெளியேற்றுவதற்கான எழுத் தாணை வழங்கப்படலாகாது என ஒன்றுக்கு மேற்படாத தடவை கட்டளையிடலாம் ; " என்னும் சொற்களை இடுவதன்மூலம் ;

(ஐ) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் —

(அ) "வாடகைக் குடியிருப்பினை முடிவுறுத்துதல் பற்றி ஓராண்டுக் கால அறிவித்தலை எழுத்தில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக. "வாடகைக் குடியிருப்பினை முடிவுறுத்தல் பற்றி ஆறுமாதகால அறிவித்தலை" என்னும் சொற்களை இடுவதன்மூலம் ; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவுக்கான காப்பு வாசகத்தை நீக்குவதன் மூலம் ;

(ஓ) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவில், "குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு முன்னராகவுள்ள ஒரு தேதியன்று அத்தகைய வளவுகளின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு முன்னரான அல்லது பின்னரான ஒரு தேதியில் ஒரு பெற்றாரிடம் அல்லது வாழ்க்கைத் துணையிடமிருந்து வழியுரிமை அல்லது கொடைமூலம் அத்தகைய வளவுகளின்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் ; அத்துடன்

(ஓ) அப்பிரிவின் (8), (9), (10), (11), (12), (13), (14), (15) மற்றும் (16) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு பின்வரும் உட்பிரிவை அதற்குப் பதிலாக இடுவதன் மூலம் :—

"(8) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் நோக்கங்களுக்காக "மாற்றிடம்" என்பது, நானூறு சதுர அடிகளுக்குக் குறையாத ஒரு தளப் பரப்பைக் கொண்டதும், நீதிமன்றத்தில் முடிவுறாதிருக்கும் வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கை எவ்வளவு தொடர்பானதோ அவ்வளவிலிருந்து இருபது கிலோமீற்றர் ஆரைக்குள் அமைந்திருப்பதும் ஆன ஏதேனும் வீடு, மனை, தட்டுவீடு, வசிப்பிடக்கூறு என்று பொருளாகும்.".

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்திற்குச் செய்யப்பட்ட திருத்தமானது, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்பு ஆக்கப்பட்ட தீர்வைகளுக்கு பின்வருவனவற்றிற்கு அமைவாக, ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடைத்தாதல் வேண்டும் :—

(அ) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் அத்தகைய வளவுகளின் நிலக்கிழார், தேவைப்படுத்தப்பட்ட தொகையை, தேசிய வீடமைப்பு ஆணையாளரிடம் வைப்பிலிடல் வேண்டும் என்னும் தேவைப்பாடு ;

(ஆ) தேசிய வீடமைப்பு ஆணையாளர், தீர்வை ஏற்கனவே வழங்கப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய வளவுகளின் வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு மாற்றிடம் ஏற்பாடு செய்தல் வேண்டும் என்னும் தேவைப்பாடு ; அத்துடன்

(இ) தேவைப்படுத்தப்பட்ட தொகை தேசிய வீடமைப்பு ஆணையாளரிடம் வைப்பிலிடப்படும் தேதியிலிருந்து பயனுறுவதாக மட்டுமே ஓராண்டு காலப்பகுதி தொடங்கும் என்னும் நிபந்தனை.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு அப் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கான காப்பு வாசகத்தில், "குறிப்பிட்ட தேதிக்கு முந்திய தேதியொன்றில் அத்தகைய வளவுகளின் சொத்தாண்மையினைப் பெற்ற பெற்றாரொருவரிடமிருந்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு முன்னைய அல்லது பின்னைய தேதியொன்றில் அத்தகைய சொத்தாண்மையை மரபுரிமை அல்லது கொடை மூலம் பெற்ற பெற்றரொருவரிடமிருந்து" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவைத் திருத்துதல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக, பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :–

"(2) எவ்வாள் –

(அ) வதிவிட வளவுகளின் விடயத்தில், இறந்த வாடகைக் குடியிருப்பாளரைப் பிழைத்திருக்கும் வாழ்க்கைத் துணை அல்லது பிள்ளை அல்லது பெற்றார் அல்லது திருமணமாகாத சகோதரன் அல்லது சகோதரி அல்லது இறந்த வாடகைக் குடியிருப்பாளர் இறப்பின்போது திருமணமாகாதவராயின், அவரின் சகோதரன் அல்லது சகோதரி ஆகவிருப்பதுடன், இறந்த வாடகைக் குடியிருப்பாளர் இறப்பதற்கு உடன்முற்போந்த ஆறுமாத கால முழுப்பகுதியின்போது அவரின் வீட்டுறுப்பினரொருவர் ஆக இருக்கின்றாரோ ; அத்துடன்

(ஆ) வியாபார வளவுகளின் விடயத்தில், இறந்த வாடகைக்குடியிருப்பாளரைப் பிழைத்திருக்கும் வாழ்க்கைத்துணை அல்லது பிள்ளை இறந்த வாடகைக் குடியிருப்பாளரால் நடாத்தப்பெற்ற வியாபாரத்தை அத்தகைய வளவுகளில் கொண்டுநடாத்துகின்றவிடத்து, அத்தகைய வாழ்க்கைத்துணையாகவிருக்கின்றாரோ அல்லது பிள்ளையாகவிருக்கின்றாரோ,

அவ்வாள் எவரும், இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட சபையின் ஏதேனும் கட்டளைக்கமைய இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அவ்வளவுகளின் வாடகைக் குடியிருப்பாளராகக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின் எவ்வாறாயினும், விடயத்துக்கேற்ப, பிழைத்திருக்கும் வாழ்க்கைத்துணை, பிள்ளை, பெற்றார், சகோதரன் அல்லது சகோதரி எவரும், அத்தகைய ஆள் —

(i) இறந்த வாடகைக் குடியிருப்பாளர் இறந்த தேதியன்று ஏதேனும் அத்தகைய வளவு களுக்குச் சொந்தக்காரராயிருந்திருப்பின் ; அத்துடன்

(ii) மூலவாடகைக் குடியிருப்பாளரின் பிழைத் திருக்கும் வாழ்க்கைத்துணை, பிள்ளை, பெற்றார், சகோதரன் அல்லது சகோதரி யாகவிருக்காவிடின்,

(2) ஆம் உட்பிரிவின்கீழ், இறந்த வாடகைக் குடியிருப்பாளரின் வளவுகளின் வாடகைக் குடியிருப்பாளராகக் கருதப்படுத லாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "22(15)" என்னும் இலக்கத்தை நீக்குவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**12.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.